1975 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு செய்தியை சொன்னீர்கள் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, தனிப்பட்டவர்கள் உபயம் என்ற பெயரால் வெள்ளி ரதம், தங்க ரதம், வைரக் கிரீடம் செய்து வைப்பதால் வைரக் கிரீடம் சாமிக்குச் சாத்த வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு கட்டளை இருக்கிறது, அதைப்போல தங்கரதம் சுற்றுப்புரத்தில் விட என்று கட்டளை வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் அரசுக்கு, கோயில் களுக்குப் பணம் உபரியாக வருகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா? அந்த உபரி பணத்திலிருந்து சில திட்டங்களையெல்லாம் செய்கிறார்கள் என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறதா? அவ்வாறு உபயம் செய்பவர்களின் மனம் புண்படும் விதத்தில் வாதங்கள் இருப்பது கூடாது என்பதை அரசு உணருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல் பிரதமர் அவர்கள் தனி நெக்லசை அனுப்பியதாகச் சொன்னார்கள், அதைப்போல யாராவது தனியாக உபயம் செய்கிறார்கள், நெக்லஸ் தருகிறார்கள் அல்லது சொந்தப் பணத்தில் வைரக் கிரீடம் செய்து கொடுக்கிறார்கள் என்றால் அது வேறு விவகாரம். அதற்காக குழு அமைக்கப்பட்டு வசூல் செய்து அந்தக் காரியங்களை செய்வது நல்லதல்ல என்பது அரசாங்கத்தின் கருத்து.

வந்தவாசியில் குளிர்பதன நிலையம்.

*635 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வந்தவாசியில் ஒரு பால் குளிர் பதன நிலையம் (Chilling Centre) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, வந்தவாசி யில் பாலைக் குளிர வைக்கும் நிலையம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, வந்தவாசி, செய்யாறு தாலூக்காக்கள் பால் வளம் அதிகம் உள்ள பகுதிகளாக இருக்கின்றன. அங்குள்ள பாலை பஸ் மூலமும், லாரிகள் மூலமும் சென்னைக்கு அனுப்புகிறார்கள். எனவே, அங்கே சிறிய அளவிலேயாவது ஒரு "சில்லிங் ப்ளாண்ட்" ஏற்படுத்த இனிமேலாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, வந்தவாசி யில்தான் இல்லை என்று சொன்னேன். செய்யாறில் செய்யும் செயற் குறிப்பு உள்ளது.